சிலகாலமாகவே தேவஸ்தானங்கள் சம்பந்தமான சீர்திருத்தங்கள் செய்வது பற்றி கவர்மெண்டார் கவனம் செலுத்தி வந்தார்கள். தேவஸ்தானங்களை சரியான நிலையில் வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் என்ன எடுத்துக்கொள்ளலாம் என்பதை ஆராய்ந்து ஓர் அறிக்கை விடும்படி ஓர் பிரத்தியேக உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த உத்தியோகத்திற்கு ஸ்ரீ P. பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

* * * *

தொழிலாளர்கள் சம்பந்தமாக ஏற்படும் சச்சரவுகளை தீர்க்கும் உத்தியோகஸ்தராக ஸ்ரீ கோசலராம நாயுடு அவர்களை கவர்ன்மெண்டார் இம்மாதம் முதல் தேதியிலிருந்து நியமித்துள்ளார்கள். அவர் இதுவரை வகித்து வந்த யுத்தநிதிக்கு சென்றவர்களின் குடும்பங்களை பாமரிக்கும் கௌரவ உத்தியோகத்தையும் அகதிகளைப் பராமரிப்பதையும் சேர்த்துப் பார்ப்பார்.

* * * *

தொழிற்சாலைகள் சட்டத்தின்படி நமது சமஸ்தானத்திலுள்ள தொழிற்சாலைகளின் வேலைகளை மேற்பார்வையிட கவர்ன்மெண்டார் ஒரு ஜூனியர் தொழிற்சாலை இன்ஸ்பெக்டரை நியமித்திருக்கிறார்கள். இந்த

வேலைக்கு ஸ்ரீ P. V. கலியாணராமன் அவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அவர் புதுடில்லிக்குப் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்.

* * * *

இவ்வருஷத்திய 2-வது அப்பீல் கோர்ட் இம்மாதம் 4-ம் தேதியுடன் முடிவுபெற்றது. வக்கீல்கள் சங்கத்தின் சார்பாக ஸ்ரீ S. R. ஸ்வாமிநாதய்யர் அக்கோர்ட்டின் நீதிபதிகளுக்கு வந்தனோபசாரம் கூறினார். அவர்களும் தக்க முறையில் அதற்கு பதிலளித்தார்கள். இவ்வருஷம் 62 அப்பீல்களும், 37 மனுக்களும், 3 புனராலோசனை மனுக்களும் இந்த நீதிபதிகளால் முடிவுசெய்யப்பட்டன.

* * * *

கெஜெட் பதிவில்லாத கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களின் சங்கம், ஏற்கனவே தங்கள் நிர்வாகக் கமிட்டிகூட்டத்தில் தீர்மானித்தபடி ஓர் மகாசபைக்கூட்டம் 28—11—47 வெள்ளிக்கிழமை மாலை 3-மணிக்கு டவுன் பாங்கு வாசகசாலையில் கூடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. அச்சங்கத்தில் இதுவரை சேராத கெஜெட் பதிவில்லா உத்தியோகஸ்தர்களை அங்கத்தினர்களாகச் சேரும்படி கேட்டுக்கொண்டும், அங்கத்தினர்களை, மகாசபைக் கூட்டத்தில் கவனிக்கப்படவேண்டிய தீர்மானங்களை 21—11—47-க்குள் சங்கத்திற்கு அனுப்பும்படிக்கும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பூசாரம் அரித்துப்போதலைப்பற்றிய குறிப்பு

இது முதன் முதலாக "சமபரப்பு அடித்துகொண்டு போதல்" என்பதில் ஆரம்பமாகின்றது. இதை பலர் கவனிக்கவேமாட்டார்கள். படிப்படியாக பூசாரமானது விலக்கப்பட்டு, அமெரிக்கர்கள் கெட்டித்தரை என்று சொல்லும்படியான அந்த காடு முரடான தரைக்கு ஓரடிக்குள்ளாகக் கூட வந்துவிடும். இம்மாதிரி கெட்டித்தரையானது செழிப்பற்றது. அதை உழுது பண்படுத்தி சிலகாலம் போட்டிருந்தால் தான் உபயோகமாகும். அந்தக் காலத்தில் அவ்விடத்தில் பூசாரமானது தாவரங்களுக்கு கொடுக்குமளவில் இருக்காது. அதன் பிறகு அறுத்தோடிகளிலாரம்பித்து பிறகு 20 அடி ஆழமுள்ள பெரிய பள்ளத்தாக்குகளாகவும் மாறுகின்றன. இம்மாதிரி பள்ளத்தாக்குகள் நமது சமஸ்தானத்தில் உதாரணமாக ஆரியூர் வாரியிலும் இடையம்பாறையிலும் இருக்கின்றன. இவ்விதமே வெறும் பள்ளங்களாக் கிடப்பதை மேற்படி இடங்களிலும் இன்னும் பல இடங்களிலும் நமது சமஸ்தானத்தில் காணலாம். அவைகளில் ஆலங்குடி தாலுகா வல்லநாடு பெரிய குளத்து வருவாயாகயிருக்கும் மணத்துரைவாரியையும் பொன்னச்சி குளத்தையும் சொல்லலாம். இவ்வித பூசாரம் அரித்துக்கொண்டு

போவதினால் குளங்களை வண்டல் படியச் செய்வதைத் தவிர ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு பூசாரத்தை அதே வித பலனைப் பெறும்படி மாற்ற முடியாது என்பதை மனதில் இறுத்திக்கொள்ளவேண்டும். எகிப்து தேசத்தில் நைல் நதி அடித்துக்கொண்டு போகும் வண்டலும் சீனா தேசங்களிலுள்ள சில பெரிய ஆறுகள் கொண்டு போகும் வண்டலும் எவ்விதமிருப்பினும் நமது சமஸ்தானத்தில் பூசாரம் அறிக்கப்பட்டு வருவதால் ஏற்படும் வண்டல்கள் செழிப்பற்றது. ஏனெனில் அதனுடைய இயற்கை அமைப்பும் செயற்கை அமைப்பும் தண்ணீரால் எவ்வளவு தூரம் கொண்டு போகப்பட்டாலும் அவ்விதமிருக்கிறது. ஜாக்ஸ் என்பவரும் ஒயிட் என்பவரும் தங்கள் புஸ்தகமான 'பூமியின் பிணைப்பு' (Rape of the Earth) என்பதில் "தண்ணீரானது மாற்றப்பட்ட பூசாரத்திலுள்ள மணல், வண்டல், களி இவைகளை அக்கக்காகப் பிரிப்பதால் அதன் செழிமையையும், பூசாரத்துக்குகந்த பொருள்களையும் பிரித்துவிடுகிறது. அதனால் அவ்விதமழிக்கப்பட்ட பூசாரப் பொருள்களை பயிரிடும் நிலங்களில் போட்டால் நிலங்களின் மாசூல்கள் குறையும்" எனச் சொல்லியுள்ளார்கள்.

நம்முடைய சமஸ்தானத்தில் ஒரு குறித்த காலத்துக்குள் இவ்வித பூசாரம் அரித்துப் போதலை தடுக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று சொன்னால் மிகையாகாது. அது ஏற்றத்தாழ்வாக ஒரு நூற்றாண்டுக்குள்ளாகயிருக்கலாம். திருமயம், ஆலங்குடி தாலுக்காக்களில் சாதாரணமாகயிருக்கும் நிலப்பரப்பைவிட்டு சற்று உயர்ந்த இடங்களும் (குளத்தூர் தாலுகாவில் அநேகமாக பாறைகளாக இருப்பதால் இவ்வித பூசாரம் அரித்துப் போதல் குறைச்சலாகயிருக்கும் இடங்களும்) பாதுகாக்கப்படாவிடில், பாலைவனமாகவும் பூசாரமரிக்கப்பட்ட பொட்டையான பள்ளங்களாகவும் பயங்கரமாகவும் செங்குத்தாகவுமுள்ள பள்ளங்களாகவும் மனித வர்க்கத்துக்கும் விலங்கு வர்க்கத்துக்கும் காய்கறி முதலியவை போடுவதற்கும் எவ்வித ஜீவனுக்கும் உபயோகமில்லாததாகப் போய்விடும். எல்லாக் குளங்களும் வண்டல்கள் படிந்து தூர்ந்து போவதோடு, பயிரிடப்படும் நிலங்கள் செழிப்பற்ற வண்டல்கள் படிவதால் அழிந்துவிடும்.

சமீப ஆராய்ச்சியில் இயற்கையாக பூசாரம் அரித்துப் போவது, செயற்கையால் அல்லது மனிதர்கள் மூலம் பூசாரம் அரித்துப் போவதிற்கு மாறானதென்றும் இயற்கையாக அரித்துப் போவதில் பல நன்மைகள் ஏற்படுகின்றனவென்றும் இவ்விஷயத்தைக் குறித்து எழுதப்பட்ட எல்லாப் புத்தகங்களும் அறிவுறுத்துகிறது. நமது சமஸ்தானத்திலும் அவ்விதமே தானிருக்கிறது. இவ்வித பூசாரம் இதே நிலைமையில் வெகுகாலம் அடித்துக் கொண்டு போகப்பட்டால் நமது சமஸ்தான நிலமையானது ஏற்கனவே

சொல்லப்பட்டபடி ஆகிவிடும். ஆரியூரிலுள்ள செங்குத்தான பள்ளமானது இருக்குமிடத்தில் 40 வருஷங்களுக்கு முன்பு இருந்ததே இல்லை என்று மேற்படி வட்டத்தின் கர்ணம் தெரிவிக்கிறார். ஆனால் இதை முழுதும் உண்மையென்று சொல்லமுடியாமல் போனாலும் அவ்விதமிருந்திருக்கக் கூடும்.

நமது சமஸ்தானச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் அடியிற் குறிக்கப்பட்டிருக்கும் மேற்கோளிலிருந்து ஒருவாறாக இதன் ஆரம்பத்தை அனுமானிக்கலாம். "சமஸ்தானத்தில் பயிரிடும் நிலங்களைப் பெருக்குவதற்காக காடுகளை அழிக்க ஏற்பாடுகள் ரெசிடெண்ட் துரை செய்தார்கள் என்று சொல்லலாம். 1826-ம் வருஷத்தில் காட்டில் மூந்தியிருந்தது போல் அவ்வளவு சிறு காடுகள் உள்ளனவா என்று கவர்னர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் மன்னர், கர்னல் பிளாக் பர்ன் உத்திரவு பிரகாரம் அநேகமாக சிறு காடுகள் அழிக்கப்பட்டனவென்றும், அவ்விதம் அழிக்கப்பட்ட இடங்களிலுள்ள நிலங்கள் பயிரிடப்படுகின்றனவென்றும் இன்னும் சிற்சில இடங்களில் சிறுகாடுகள் இருக்கின்றனவென்றும் கூறினர்". எவ்விதமிருப்பினும் சிற்சில இடங்களில் அதாவது பூசாரம் அரித்துச் சென்றது மிகுதியாக உள்ள இடங்களில், புதரடர்ந்த காடுகள் அநேகமிருக்கின்றன. ஆனால் புதுக்கோட்டையில் மரங்களடங்கிய காடு ஒன்றுமிருந்ததில்லை.

வண்டித் தடங்கள் அருத்தோடிகளை உண்டுபண்ண ஓர் முக்கிய காரணமாகும். இதைப் பற்றி ஹெய்லி பிரபு தன்னுடைய ஆப்பிரிக்கா என்னும் புத்தகத்தில் எழுதியுள்ளார். ஒரு இடத்தில் பூசாரம் அடித்துக் கொண்டு போவது முதல் முதலாக வண்டித் தடங்களால் அருத்தோடிகள் தென்படும். பிறகு இவைகள் ஆழமாக செய்யப்படுவதினால் இந்த வண்டித் தடங்களை உபயோகிக்க முடியாது. அதனால் அதன் பக்கத்தில் வேறு தடம் ஏற்படும். ஏற்கனவே ஆழமாக்கப்பட்ட தடங்கள் இன்னும் ஆழமாக்கப்பட்டு அருத்தோடிகள் தென்பட்டு தக்க காலத்தில் அவைகள் ஆழ்ந்த வாரிகளாக மாறுகின்றன.

எட்டு வருஷங்களுக்கு முன்பு இவ்வித பூசாரம் அரித்துப் போதலை தடுக்க ஒரு வித ஏற்பாடும் செய்யப்படவில்லை. குளங்களில் வண்டல் தங்காதபடி இருக்கவே முழுகவனமும் செலுத்தப்பட்டது. அதனால் பெரும் செலவில் குளத்துக்கு வரத்து வாரி சேருமிடத்தில் கட்டடச் சுவர்கள் எழுப்பப்பட்டு அவ்வண்டல்கள் படியா வண்ணம் தடுக்கப்பட்டன. அபரிமிதச் செலவால் ஒரு சில குளங்களுக்குத் தான் அவ்வித வசதி இருந்தது. ஆனால் நூற்றுக்கணக்கான—ஆயிரக்கணக்கானவை அல்ல—குளங்களுக்கு இவ்வித வசதி இல்லை. இவ்விதக் கட்டிடங்களால் வண்டல்கள்

குளங்களை அடைவதினின்றும் பூராவாகத் தடுக்க முடியவில்லை. இந்தக் கட்டிடங்களுக்குப் பின்னுல் தங்கப்படும் வண்டல்களை லாரிகள் மூலம் அப்புறப்படுத்தலாமென்று எண்ணியதும் உண்டு. ஆனுல் அவ்விதம் ஒரு நாளும் செய்யப்படவில்லை. அவ்விதம் செய்தால் செலவு மிதமிஞ்சிப் போவதோடு இவ்வித வண்டல்களை வேறு ஒரு குளத்திற்கும், சாகுபடி செய்யும் நிலங்களுக்கும் அரித்துப் போகாவண்ணம் சேமித்து வைக்க ஓர் இடத்தை கண்டுபிடிப்பது கடினமான காரியமாகும். உயரமாக உள்ள நிலங்கள் வேகமாக கரைந்து போவதைப் பற்றி யாரும் யோசிக்கவேயில்லை. இது கூரை ஒழுகுவதை நிறுத்தத் தரையில் தாம்பாளம் வைப்பது போலிருக்கிறது.

நாம் இப்பொழுது கவனிப்பதெல்லாம் அவ்விதக் கரைதலையும் அதனுல் ஏற்படும் வண்டல் உற்பத்தியையும் தடுப்பதைப்பற்றித் தானேயொழிய மேல் நிலங்களிலிருந்து நல்ல பூசாரம் அடித்துக்கொண்டு போகப்பட்டு கெட்டழிந்து வண்டலாக மாறிய பிறகு அந்த வண்டலை எங்கு கொண்டு போய்ப் போடுவது என்பதைப் பற்றியல்ல. இதன் முக்கியதத்துவம் என்னவெனில் அவ்வித அரித்தல் ஏற்பட்டிருக்கும் இடங்களில் மேலிருந்து கீழ் வரையுள்ள அரித்தலைத் தடுக்கும் வேலையை ஆரம்பிக்க வேண்டும். அநேகம் இடங்களில் அரளைகற்களால் அணைச் சுவர்கள் எழுப்பியும் நிலப் பரப்பிலிருந்து அரித்துப் போவதை தடுக்க மண் வரப்புகள் பல இடங்களில் போடப்பட்டுமிருக்கின்றன. பனை மரங்களால் முதலில் அணைகள் போட்டுப் பார்க்கப்பட்டன. செலவு குறைவு என்றாலும் நல்ல உருவாக்கப்பட்ட மரக்கட்டைகளை உபயோகப்படுத்துவதால் ஏற்படும் அவ்வளவு வெற்றியளிக்கவில்லை.

ஆழமான கரைகள் படிகள் போல் வெட்டிவிடப்பட்டு அப்படிகளில் அநேக விதமான புற்கள் வளர்க்கப்படுகின்றன. 'கிக்குயூ' (Kikuyu) புல் என்ற ஒரு ஆப்பிரிக்க புல்லானது கொடைக்கானலில் ஏற்கனவே பயிரிடப்பட்டது. கெனியா, பிரிட்டோரியா, பிரதேசங்களிலிருந்து பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்ட ஜயண்ட ஸ்டார் புல்லும் போட்டுப் பார்க்கப்பட்டன இன்னும் பல வகை புல்லுகளும் நம் நாட்டுப்புற்களும் பரிக்ஷார்த்தமாக போடப்பட்டன. கிக்குயூ புல் தகுந்த பலன் அளிக்கவில்லை. ஆனுல் ஜயண்டஸ்டார் புல் ஒரு இடத்தில் நன்ருக வளர்ந்தது. இருந்தாலும் அதை அவ்வளவாக வெற்றி பெற்றதாகச் சொல்லமுடியாது. இந்த விஷயத்தில் செய்யவேண்டிய அலுவல்கள் இன்னும் பல இருக்கின்றன.

மணத்துரை வாரிக்கடுத்த நிலத்தில் சமஸ்தான மோட்டார் கலப்பையால் சரிவில் உழப்பட்டு சோளம் விதைக்கப்பட்டது. அவ்விதம உழுதில் மிக்க பயன் அளித்த போதிலும் சோளம் பருவம் தவறி விதைத்த

தால் தக்க பலனைப்பெற முடியவில்லை. கத்தாழை, மிந்திரி, விராலி போன்ற செடிவர்க்கங்கள் பயிரிடப்பட்டன. இவ்விதச் செடிகள் குறைந்த செலவில் பயிரிடப்பட்டதால் ஆறு இடங்களில் இந்த வேலையைத் துடங்கி நடத்தினார்கள். இந்த வேலைகளுக்கு சிறுகச் சிறுக உயர்த்தப்பட்ட ஓர் குறிப்பிட்ட தொகையானது பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டது.

குடியானவர்கள் முதலில் இந்த வேலைகள் தங்கள் சௌகரியத்துக்காக செய்யப்படுகிறதென்பதை கொஞ்சத்தில் ஒப்புக்கொள்ளவில்லை. இவ்வித வேலைகள் அவர்கள் குளத்திற்கு வரும் வரத்துத் தண்ணீரை குறைத்து விடுகிறது என்றும் சொன்னார்கள். அந்தத் தண்ணீரை சரியானபடி உபயோகிக்காவிட்டால் கெட்டுவிடும் என்பதை அவர்கள் உணரவில்லை. ஆனால் குளங்களின் தண்ணீர் வரத்தை, வெள்ளத்தின் வேகத்தை குறைத்தும், அளவைச் சீர்படுத்தியும் இவ்வித வேலைகளால் பெருக்கலாம். இப்பொழுது அநேகம் பேர்கள் குடியானவர்கள் உள்பட இவ்வித வேலைகளின் நன்மைகளை அறிந்து கொண்டார்கள். அதனால் சட்ட சபைகளில் பூசார அரித்தலைத் தடுக்கும் வேலைகளுக்காக முன்பெல்லாம் குறை கூறிக்கொண்டிருந்தாலும், இப்பொழுது அதிகச் செலவிற்கு பணம் கேட்கிறார்கள்.

இந்த விஷயம் மிகப் பெரிது. இருந்தாலும் ஈ-தர்பார் தற்பொழுது சிறிதளவுதான் இவ்விஷயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். லக்ஷக்கணக்காகவும் கோடிக்கணக்காகவும் இதன் பேரில் செலவிடலாம். அது முடியாத காரியம். ஆனால் ஈ-தர்பார் ஒன்றும் செய்யாமல் இருப்பதற்கு பதிலாக வருஷா வருஷம் தங்களால் முடிந்ததை ஏதோ படிப்படியாக இவ்வேலைகளைச் செய்வது மேல் என்று முடிவு செய்துள்ளார்கள் "என் பிந்திய சந்ததி எனக்கு ஒன்றும் செய்யவில்லை என்ற காரணத்தால் நான் மாத்திரம் என் அவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும்" என்று சொல்வதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

ஸமஸ்தான உணவு நிலைமை.

(1947-ம் ௵ அக்டோபர் மீ முதல் பக்ஷத்தியது).

1. சீதோஷ்ணஸ்திதியும் பயிர் நிலையும்:—

எப்பொழுதும் போல் சீதோஷ்ணம் உஷ்ணமாகவும் வரண்டும் தானிருக்கிறது. சமஸ்தானம் பூராவும் தாராள மழை பெய்திருக்கிறது. இது நாற்றுப்பயிர்களுக்கு உபயோகமானது. சிற்சில இடங்களில் நெல் அறுவடையாகி பலன் சுமாராகயிருக்கிறது. உணவுத் தானியங்களை இன்னும் அதிகப்படியான நிலங்களில் பயிரிடுவதை உத்ஸாகப்படுத்தும்

நோக்கத்துடன் விவசாயிகளுக்குத் தாராளமாக கிணறுகள் வெட்ட கடன்கள் கொடுக்கப்பட்டன.

2. தானிய இருப்பு வகையரு:—

இந்த பக்ஷ ஆரம்பத்தில் உணவு தானிய இருப்பு 2,278 டன்களாகும். அதில் 2,224.8 டன்கள் அரிசியாகும். முந்திய 4 வாரத்திய செலவு திட்டப்படி கணக்கிட்டால் கையிருப்பு அரிசி சுமாராக 9 வாரத்திய பங்கீட்டிற்கு இருக்கலாம். சமஸ்தானத்திலேயே அதிகப்படியுள்ளவரிடமிருந்து சேமிக்கப்படும் உணவுத் தானியங்களை மொத்த வியாபாரிகளுக்கும் சில்லரை வியாபாரிகளுக்கும் கொடுக்கப்படுகின்றது. தவிர கம்பு, சோளம் போன்ற தானியங்களை எவ்வளவு அவரவர்களால் வாங்க முடியுமோ அவ்வளவை வாங்கியும் உணவுப்பொருள்கள் பங்கீட்டில் அவைகளையும் சேர்த்துக்கொள்ளவும், அவரவர்கள் எவ்வளவு எங்கெங்கு வகையில் வாங்கியிருக்கிறார்களென்றும் எவ்வளவு ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்கும் ரேஷன் கடைகளுக்கும் கொடுத்து செலவழித்திருக்கிறார்களென்றும் கையிருப்பு எவ்வளவென்றும் வாராந்திர அறிக்கை மூலம் தெரிவிக்கும்படி மொத்த வியாபாரிகளுக்கும் சில்லரை வியாபாரிகளுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது உணவு தானியங்களை விசேஷ அக்கரையுடன் சேகரிக்க 10 சேகரிப்பு இன்ஸ்பெக்டர்களும், சேகரிக்கப்பட்ட தானியங்களை தாமதமின்றி அனுப்பிவைக்க மூன்று குமாஸ்தாக்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மதருஸ் கவர்ன்மெண்டார் 1947-ம் ஸ்ரீ ஆகஸ்டு மாதத்திலிருந்து 720 டன்கள் அரிசியும் 80 டன்கள் கம்பு, சோளம் போன்ற தானியங்களையும் தஞ்சாவூர் கோட்டாவாக ஒதுக்கி அனுப்புப்படி களிகூர்ந்து செய்துள்ளார்கள். இந்தக்கோட்டாவை மாதம் ஒன்றுக்கு 500 டன்களாக தற்பொழுது மாற்றியிருக்கிறார்கள்.

3. விலை விவரம்:—

25—8—47-வரை உணவுப்பொருள்களின் விலை ஒரேமாதிரியாக யிருந்தது. ஆனால் அதன் பிறகு தஞ்சாவூர் நெல் விலை உயர்வின் காரணமாக நெல்லின் விலையுயர்ந்துவிட்டது.

4. சேகரிப்பும், மேல்பார்வையும், சேமித்துவைத்தலும்:—

எவ்வளவு தூரம் உணவுப்பொருள்களை சேகரிக்கமுடியுமோ அவ்வளவு தூரம் சேகரிக்கத்தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்திருக்கும் இடங்களை அவ்வப்பொழுது இந்தியா கவர்ன்மெண்டாரிடமிருந்து வரும் போதனைகளையொத்து பங்கீடு இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் பார்வையிட்டு வருகிறார்கள். இவ்விதசேமிப்பு நிலையங்களை சமஸ்தான போலீஸாரும் பாதுகாத்து வருகின்றனர்.

5. உணவுத்தானியங்கள் போக்குவரத்து :—

வெளியிடங்களிலிருந்து ரயில் மூலமும் லாரிகள் மூலமும் உணவு தானியங்கள் சமஸ்தானத்திற்கு ஏற்றுமதியாகிறது. இவைகள் சமஸ்தானத்தில் பல இடங்களுக்கு மோட்டார் லாரிகள் மூலமாயும் கட்டைவண்டிகள் மூலமாயும் விநியோகிக்கப்படுகின்றது. இவ்வித உள்நாட்டு ஏற்றுமதியில் ஒருவித கஷ்டமும் இருப்பதாகத் தெரியவில்லை.

6. பங்கிடும் ஊன்சத்தும் :—

15—3—46 முதல் பங்கிடு சமஸ்தானத்தில் ஆரம்பமாகி வெற்றிகரமாகவே நடந்து வருகிறது. தற்கால உணவு நெருக்கடியில் சோளமாவு கெட்டுவிடாமலிருப்பதற்கு ரேஷன் கார்டுள்ளவர்கள் தங்களுக்குள்ள 8 அவுன்ஸ் ரேஷனைத் தவிர உபரியாகப் பெற்றுக்கொள்ளும்படிக்கும் அதற்காக அந்த மாவை சுத்தம் செய்யவும் ஈ-தர்பார் அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். தேக சிரமப்பட்டு உழைக்கும் பாட்டாளி மக்களுக்குத் தனிப்பட்ட நபர்களாயிருந்தால் தானியமாகவும் தொழிற்சாலைகளிலுள்ளவர்களுக்கு சமைத்த உணவாகவும் அளிப்பதற்கென்று உபரிப் பங்கிடு கொடுக்கப்படுகிறது. கர்ப்பஸ்திரீகளுக்கு ஒரு நாளைக்கு 4 அவுன்ஸ் அரிசி உபரிப் பங்கிடாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. 25—7—47 முதல் அரிசிப் பங்கிடு 10 அவுன்ஸிலிருந்து 8 அவுன்ஸாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

7. உணவுப் பதார்த்தங்கள் செய்யப்படும் எண்ணெயும், எண்ணெய் வித்துக்களும், புண்ணாக்குகளும் :—

தனிக்கை செய்யப்பட்டிருக்கும் பிரஸ்தாப பக்ஷத்தில் உணவுப் பதார்த்தங்கள் செய்யும் எண்ணெய் வித்துக்கள், புண்ணாக்குகள் இவைகளின் விலைவிபரத்தில் விசேஷ மாறுதல்களொன்றுமில்லை.

8. பொதுவான விஷயங்கள் :—

பிரஸ்தாப பக்ஷத்திற்கு முந்திய 4 வாரத்தியக் கணக்கின்படி அரிசி கையிருப்பு இன்னும் 10 வாரத்திய பங்கீட்டிற்கு போதுமானது.

ஆகாரமும், தேகபுஷ்டியும். (4)

(V. S. கணபதி சாஸ்திரியவர்).

ஊன் சத்துக்கள் அதிகமாக இருக்கும் உணவுப் பொருளாக நாம் பொருக்கி எடுப்பதில் வேறு சில விஷயங்களையும் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஊன சத்துமட்டும் அதிகமாகயிருந்தால போதாது. இழந்த பழைய சதைக்குப் பதிலாக அதற்குச் சமானமான புதிய சதை உண்டாக்கக்கூடிய

"**amino acid**" என்ற உயிர்சத்து சரியானபடி இணங்கியிருக்கும் உணவுப் பொருள்கள்தான் மனிதனுக்குத் தேவையாகயிருக்கிறது. "**amino acid**" என்ற அமிலம்தான் சதையைக் கட்டும் "செங்கல்கள்" என்று **Dr. Aykroyd** என்ற புஷ்டி சாஸ்திர நிபுணர் சொல்லுகிறார். அவர் எழுதியிருக்கும் "இந்திய ஆகாரங்களும் திருப்திகரமான ஆகாரங்களைத் திட்டமிடுதலும்" என்ற புத்தகத்தை ஒட்டியே இந்தக் குறிப்புகள் எழுதப் படுகின்றன.

ஊன் சத்துக்களிலிருந்து மனிதனுக்கு அளிக்கப்படும் உயிர் சக்தியின் அளவு அந்தந்தப் பொருள்களில் மாறுபடுகிறது. அதை அடியிற்கண்ட பலகத்தில் காட்டப்படுகிறது.

பொருள்கள்.	தேக வளர்ச்சி சக்தியின் அளவு (Biological Value).	பொருள்கள்.	தேக வளர்ச்சி சக்தியின் அளவு (Biological Value).
கம்பு	83	முருங்கைக்கீரை ...	41
அரிசி சோளம் ...	83	அகத்திக்கீரை ...	64
தினை	77	உருளைக்கிழங்கு ...	67
மக்காச்சோளம் முத்தாதது.	60	சக்கரைவள்ளி ...	72
கேப்பை (கேழ்வரகு) ...	89	கத்தரிக்காய் ...	71
தீட்டின பச்சை அரிசி ...	80	கொத்தவரை ...	51
கோதுமை ...	67	வெண்டைக்காய் ...	83
கொத்துக்கடலை ...	76	முந்திரிப்பருப்பு ...	72
உளுந்து	64	தேங்காய் ...	58
காராமணி (தட்டைப்பயிறு)	61	எள்ளு	67
பாசிப்பயிறு ...	51	நிலக்கடலை ...	58
கொள்ளு, காணம் ...	59	மணிலாக்கொட்டை ...	58
துவரை	74	வேர்க்கடலை ...	58
கீரை இலை ...	72	முட்டை ...	94
முட்டைக்கோஸ் இலை ...	76	பசுவின் பால் ...	85

அதிகச் சதையால் தேகம் பெருத்து, பெருத்த தேகத்தால் சிரமப் படுகிறவர்கள் தங்கள் சதையைக் குறைக்கவேண்டுமென்று நினைத்து, ஊன் சத்துக்களை நிறுத்துவது தவறு. அவர்கள் உட்கொள்ளும் நெய் பண்டங்களை குறைக்கவேணும்; அல்லது நிறுத்தவேணுமே ஒழிய ஊன் சத்துக்களை நிறுத்தக்கூடாது. அதனால் தேகத்தின் உறுப்புகளுக்குத் தேவையான மாமிசக் கட்டுகள் புதிப்பிக்கப்படாமல் தளர்ந்துபோகும். அதிகச் சதையைக் குறைப்பதைப்பற்றி, நெய்ப் பண்டங்களைப்பற்றிச் சொல்லும் போது விவரிக்கப்படும்.

மேற்கண்ட பலகத்திலிருந்து மனிதனின் தேக வளர்ச்சிக்குறிய ஊன் சத்துக்களில் பால், முட்டை, மீன், மாமிசம் முதலிய மிருக உணவுகள் முதல்தரமானதென்றும், கம்பு, அரிசி முதலிய தானிய வகைகள் இரண்டாவது என்றும், துவரை முதலிய பருப்பு வகைகள் மூன்றாவது என்றும், தேங்காய், நிலக்கடலை முதலியவை நான்காவது என்றும் விளங்குகிறது. ஆகையால் இவைகளில் அதிக சக்தி உள்ளவைகளுடன் குறைந்த சக்தியுள்ளவைகளைக் கலந்து உண்ணுவது நலம் என்று புலப்படும்.

நிற்க ஊன் சத்துக்கள் உள்ள உணவுகள் எடுத்துக்கொள்ளுவதில் அவைகள் மனிதனுடைய பருவம், தேக நிலை, கால நிலை முதலியவைகளை ஒட்டி எவ்வளவு சுலபமாக ஜீர்ணமாகக்கூடியது என்பதையும் கவனிக்க வேண்டும். அவ்வாறு மனிதன் சுலபமாக ஜீர்ணம் செய்யக்கூடிய பொருள்களை அவைகளின் தேக வளர்ச்சி சக்தியையும் காட்டி மேலே ஒரு பலகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக அகில இந்திய உணவுத் திட்டம் நிச்சயிப்பதில் ஜனங்களின் ஜாதியாசாரங்கள், மதானுஷ்டானங்கள் இவைகளுக்கு விரோதமற்றதாக இருக்கவேண்டியதுடன், சீரான உணவை மலிவாக கொடுக்கவேண்டுமென்று தேசியத் தலைவர்களும், இப்பொழுது சுதந்தரம் அடைந்திருக்கும் எல்லா அரசாங்கங்களும் முயற்சி செய்கிறார்கள்.

தேசத் தற்காப்புக்கும், பண்பு மலர்ச்சிக்கும் அஸ்திவாரமாக இருப்பது சீரான உணவுகளே. சீரான உணவுத் திட்டம் செய்து அவைகளை ஏழை முதல் வெகு பணக்காரர்வரை யாவரும் விலை, தாகு முதலிய இந்திரஜால வலைகளில் அகப்பட்டுக்கொள்ளாமல் அடைந்து உண்ணும்படி செய்தால் ஒழிய இப்பொழுது வலிவு குன்றியிருக்கும் தேக நிலை, மனோநிலையில் மேல் நாட்டு தேசங்கள் வெகு நூற்றாண்டுகளாக சுதந்திரத்தையும், அதனால் ஆகார வசதிகளையும் அனுபவித்து தலைமுறைத் தத்துவமாக உறுதிப்படுத்தப்பட்டு நல்ல ஆரோக்கியத்துடனிருப்பதால், நம் தேசம் அவைகளுடன் அமைதியான காலங்களில் தொழில் முறைகளில்கூட போட்டிபோட முடியாது. ஆகையால், யுத்தத்தைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. உலகில் யுத்தமே இல்லாமல் இனிமேல் அமைதி தெய்வமே ஆட்சி நடத்துமாக.

ஆகையால் "மலிந்த சீருணவுகளை" ஜனங்களுக்கு கொடுக்கவேண்டியது தற்காலத்திய ஒவ்வொரு நாகரீகமுள்ள அரசாங்கத்தின் முதற் கடமையாகும். இது ஒரு பகீரத பிரயத்தினம் ஒரு நாளில் செய்யக்கூடியதல்ல. எல்லோரும் ஒத்துழைத்தால் பகீரதன் கங்கையைக்கொண்டு வந்ததுபோல், இந்த மலிந்த சீருணவு என்ற கங்கை ஒவ்வொரு ஏழை

வீட்டிற்குள்ளும் நுழைந்து இன்பத்தைப் பெருக்கி துன்பத்தை ஒழிக்கலாம்.

ஊன் சத்துக்களைப் பற்றி மேற்சொன்ன விஷயங்களிலிருந்து எந்த மனிதனுக்கும் ஊன் சத்துக்கள் அடிப்படையான வஸ்துவென்றும் இந்தச் சரீரச் சுவற்றை வைத்து நம் வாழ்க்கைச் சித்திரத்தை வரைந்து வாழ்கைக் கலையை வளர்க்க வேண்டுமானுல் ஊன் சத்துக்கள் என்ற செங்கல்கள் இன்றியமையாதவை. அவை இல்லாதவரை விவசாயத்தைப் போன்ற தேகப்பிரயாசை செய்யவேண்டிய காரியங்களுக்கும் மூளை வேலைகளுக்கும் பொதுவாகயிருக்கும் சரீரக்கட்டு சரியான நிலையில் வைத்துக்கொள்ளப் படாமல் கெட்டு மெலிந்துபோகும். திறமை குறைந்துபோகும். புலன்கள் வேகமாக வேலை செய்யாது. வெளிப்படையான கார்ய பிரதி கார்யங்களை ஐம்புலன்கள் மெதுவாக ஏற்றுக்கொள்கின்றன. மனதில் அவை லேசாகப் பதிவு செய்யப்படுகிறது வியாதிகளை எதிர்த்துக் தள்ளும் சக்தி தேகத்திற்கு குறைந்து விடுகிறது. சரீரமாக அமைந்திருக்கும் தசைகளும், சதைகளும் மாமிசக் கட்டுகளும் சுருங்கி க்ஷீணமடைகின்றன. உசித காலத்திற்கு முன் விருத்தாப்பிய தசை ஏற்படுகிறது. வீக்க வியாதி (ocdima) உண்டாகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் நம் தென்னிந்திய உணவை எடுத்துக்கொள்வோம். அதில் முக்கியமான உணவு அரிசி, ஊன் சத்துக்கள் மரக்கறிகளிலும், தான்யங்களிலும் வெகு குறைவு என்றும் அவைகளில் அரிசி மிகக் குறைவான ஊன் சத்துக் கொண்டது என்றும் சொனனேம். ஆகையால் தென்னிந்திய உணவில் ஊன் சத்துக்கள் வெகு குறைவு என்றும் அநேகமாக சூன்யம் என்று சொன்னுல் மிகையாகாது. இவ்வாறு தலைமுறை தத்துவமாக நாம் பல வருஷங்களாகச் சாப்பிட்டுக்கொண்டு வருகிறோம். பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு ஏற்றுமதி, இறக்குமதி சாதனங்கள் ஏற்பட்ட பிறகு நம் தேசத்து உணவுப் பொருள்கள் வெளியேற்றப்பட்டதாலும், கையில் காசு கொடுக்கும் பயிர்கள் போடுவதற்காக எவ்வளவு உணவுப் பயிர் விளையும் வயல்கள் காசுப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டனவென்றும் இங்கு எடுத்து விவரிக்க இடமில்லை. ஆயினும் பிரிட்டிஷார் நம் தேசத்தை ஜயித்த பிறகு சீரான உணவுகள் போதியவை இல்லாமல் தலைமுறைக்குப் பின் தலைமுறையாக தேக சக்தியும், மனேசக்தியும் க்ஷீணித்துக்கொண்டே வந்திருக்கிறோம் என்று விளங்கும். அதிலும் மூளை வேலை செய்கிறவர்களாவது அதிகமான வருமானம் பெற்று அவர்களுக்கு வேண்டிய ஊன் சத்துள்ள ஆகாரங்களை தேடிக்கொள்ள முயலுகிறார்கள். ஆனுல் நம் தேசத்தின் பெரும்பாலோரான விவசாயிகள், பெரும் பாட்டாளிகள் என்ன செய்வார்கள். அவர்களுக்குள்ள ஊன்

சத்துக் குறைவு எவ்வளவோ தலைமுறைதத்துவமானது. அவர்களுடைய தேகம், மனம், தேகப் பொலிவு முக தேஜஸ் வளர வேண்டுமானால் அவர்கள் யாவரும் ஊன் சத்துக்கள் சாப்பிடாமலிருக்க முடியாதபடி மலிந்து கிடக்கும்படி செய்ய வேணும் இதைப்போல் மற்ற உணவுச் சத்துக்களையும் விருத்தி செய்யவேண்டும். இல்லாவிட்டால் விவசாயியின் வறுமையாலும் அனாவசியமான பழக்க வழக்களால் ஏற்பட்டிருக்கும் பணத் தேவையாலும் எவ்வளவு உணவுப் பொருள் இருந்தாலும் அவைகளை தான் சாப்பிடாமல் விற்று காசு முடிந்துகொள்ளவே முயலுவான். ஆகையால் தேசிய உணவு திட்டமும் சமூக சீர்திருத்தத்துடன் சிக்கி நிற்கிறது.

வெல்லம், சர்க்கரை தயாரித்தல்.

(G. சுவாமிநாதய்யர்).

1. சார்பிழிதல்:—வெட்டப்பட்ட 24-மணி நேரத்திற்குள் கரும்பு ஆலையிலிடப்பட வேண்டும். 70-சதவீதம் சார் எடுப்பதுதான் திருப்திகாமான சார்பிழிதல் ஆகும். ஆலை, சார்ஏந்தும் கொப்பரை இவைகள் சுத்தமாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சார் புளித்து கெட்டுப் போகும். வெல்லத்தின் ராசியும் குறையும். மதராஸ் மாகாணத்தில் பொதுவாக சுண்ணாம்பு கரும்புச் சாரோடு கலக்கப்படுகிறது நல்ல நிறமுடைய வெல்லம் அடைய இரும்புக் கொப்பரைகளை உபயோகிக்காமல பித்தளைக் கொப்பரைகளை உபயோகிக்கவேண்டும்.

2. சார்காய்ச்சுதல்:—சிந்துவாதி அடுப்பை உபயோகிப்பதால் விறகுச் செலவு குறையும். ஆழமில்லாததும் அகன்றதுமான கொப்பரைகளை உபயோகிக்கவேண்டும். சுண்ணாம்பை அதிகமாகக்கலந்தால் சார்பொங்கி வழிந்து கஷ்டம் ஏற்படும். தவிரவும் வெல்லம் கருமை நிறமாக இருக்கும். காய்ச்ச ஆரம்பித்த அரைமணி நேரத்தில் சாரிலிருந்து அழுக்கு திரண்டு ஆடை போல் மேலே வரும். அதை ஒரு கரண்டியால் எடுத்து, வடிகட்டி, வடிக்கட்டின தெளிவான சாரை அடுத்த கொப்பரை காய்ச்சும்போது கலக்கலாம். மூன்று மணி நேரத்திற்கு ஒரு கொப்பரை வீதம் காச்சமுடியும்.

3. பதம் பார்த்தல்:—கொஞ்சம் காயும் சாரை ஒரு மர அகப்பையால் எடுத்து தண்ணீரில் ஊற்றி பிறகு அதை எடுத்து கொப்பரைமேல் அடித்தால் வெண்கல ஓசை ஏற்படவேண்டும். கப்பிபோல் நெகிழாமல் கல்போல் உடையவேண்டும். சரியான பதம் வந்தபிறகும் காய்ச்சினால் சார், கருகி விடும்.

4. வெல்லம், சர்க்கரை தயாரித்தல்:—பதம் வந்ததும் கொப்பரையை இறக்கிச் சாரை அச்சுகளில் வார்க்கவேண்டும். இதன் மூலம் நமக்கு அச்சு வெல்லம் கிடைக்கிறது.

பழுப்புச்சக்கரை செய்வதற்கு காய்ச்சினசாரை கொப்பரையிலேயே தேய்க்கவேண்டும். கொஞ்சநேரத்தில் அது மணல் சர்க்கரையாக மாறி விடுகிறது.

தேனீ வளர்த்தல் (தொடர்ச்சி).

(சா. தேவனேசன்).

தேனீ வகைகள்.

தேனீக்களில் பலவகைகளுண்டு. அவற்றில் சாதாரணமாக நாம் காணும் நான்கு வகைகளை மாத்திரம் இங்கு சற்று கவனிப்போம். அவையாவன:—

1. மலைத்தேனீ (Rock Bee).
2. அடுக்குத்தேனீ அல்லது பொந்துத்தேனீ (Apis Indica).
3. கொம்புத்தேனீ (Apis Florea).
4. கொசுத்தேனீ (The Dammar Bee).

1. இவற்றில் மலைத்தேனீ மிகப்பெரியது, கொசுத்தேனீ மிகச்சிறியது. மலைத்தேனீ பெயருக்கொப்ப உயர்ந்த மலைகளில் எளிதாக மனிதன் ஏறக்கூடாத பாறைச் சரிவுகளிலும், கட்டடங்களின் மேல் மாடியிலும், உன்னத மரங்களிலும், பெரிய அடையைக் கட்டும். இது ஒரே அடை தான் கட்டும். அதில் தேன் ஏராளமாக சேர்த்துவைக்கும். ஆனால் இவ் வகைத் தேனீ மிகக்கொடூரமானது. மனிதன் தன்னை லேசில் அண்ட விடாது. இதை மனிதன் பிடித்து வளர்ப்பது அசாத்யம். இவற்றை அழித்துத்தான் தேனெடுக்கிறார்கள். இதன் மெழுகும் அதிகப்பயனுள்ளது.

2. பருமனில் மலைத்தேனீக்கு அடுத்துள்ளது அடுக்குத்தேனீ அல்லது பொந்துத்தேனீ. சந்துகளிலும், பொந்துகளிலும், அடுக்கடுக்காக அடைகளை இத்தேனீ கட்டிவைப்பதால் இப்பெயர்கள் வழங்குகின்றன. இந்த நான்கு வகைத் தேனீக்களில் அடுக்குத்தேனீ ஒன்றே நவீன முறையில் வளர்ப்பதற் கேற்றது. மரப்பொந்துகளிலும், சுவர்கள், கட்டடங்களிலுள்ள துவாரங் களிலும், கவனிக்காமல் விடப்பட்ட கலயங்கள், பெட்டிகள் முதலியவற்றிற் குள்ளும் இத்தேனீ தன் தேனடைகளைக் கட்டிவைக்கும். பொதுவாக 5, 6, அல்லது 7 அடைகள் ஒழுங்காக அடுத்தடுத்துக் கட்டப்பட்டிருக்கும்.

இத்தேனீயின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது வெகு எளிது. அதி காலையில் கிழக்கு வெளுத்தவுடன் இத்தேனீக்கள் தங்கள் பொந்துகளினின் றும் அதிவிரைவாக வெளியேறுவதும் அதனுட் செல்லுவதுமாக இருக்கும்.

ஆடு மாடு மேய்க்கும் பையன்கள் தோட்டக்காரர் முதலியோரை விசாரித்தால் இத்தேனீக்களின் இருப்பிடத்தை யறியலாம். அப்படிக்கண்டால் அவற்றை ஒருபோதும் அழிக்காதீர்கள். அதை எடுத்து வளர்க்கத்தெரியாவிடில் என்னைக்கேளுங்கள் நான் சொல்லித்தருகிறேன். அல்லது பக்கத்தில் தெரிந்தவர்களிருந்தால் அவர்களிடம் கேட்டு அறிந்துகொள்ளுங்கள். என் பண்டையிலுள்ள ஒன்பது தேன் கூடுகளில் என்பங்களாவிலிருந்து 2 பர்லாங் தூரத்திற்குள்ளாக அநேகமாக மரப்பொந்துகளிலிருந்தே பிடிக்கப்பட்ட தேனீக்கள் வளர்ந்து வருகின்றன. இவற்றினின்றும் நான் 1947-ம் வருஷத்தில் மாத்திரம் எடுத்த தேனின் நிறை 2½ மணு. என்பள்ளிக்கு இதுவரையில் தேன் விற்றுக்கொடுத்த தொகை ரூ. 100. அடுக்குத் தேனீயைப்பிடித்து நூதனமுறையில் வளர்க்கும் விவரங்களை இனிவரும் கட்டுரைகளில் காணலாம்.

3. கொம்புத்தேனீ அடுக்குத்தேனீயைவிட சற்றுச் சிறியது. இதன் முதுகில் பளிச்சென்ற வெள்ளை நிறமான வரிகளைக்கொண்டு இத்தேனீயை அடையாளம் காணலாம். அநேகமாக மரக்கிளைகளில் இது தன் ஒரே அடையைக் கட்டும். சந்துகளிலும், இருட்டிலும் இது வசிக்க விரும்புவதில்லை. சற்றுத் தொந்தரவு கொடுத்தால் இது ஓடிவிடுகிறது. ஆதலால் இதை வளர்ப்பது முடியாதகாரியம்.

4. கோசுத்தேனீ அடுக்குத்தேனீயைப்போல் சந்துகளிலும் பொந்துகளிலும் வசிக்கப் பிரியப்படுகிறது. இதையும் வளர்க்கலாம். ஆனால் இதிலிருந்து கிடைக்கும் தேன் மிகக் கொஞ்சமே. ஆதலால் இதைத் தேன் சேகரிக்கும் நோக்கதோடு வளர்ப்பதில் லாபமில்லை.

"கோழிகள் வளர்த்தல்."

(G. துரைஸ்வாமி அய்யங்கார்).

கோழிகள் வளர்ப்பது இங்கு விவசாயிகளுக்கு புதிதானதல்ல. அநேகமாய் கிராமங்களில் எல்லோரும் இதில் ஈடுபட்டுக்கொண்டுதான் வருகிறார்கள். இருந்தபோதிலும், உள்ளூர் தேவையான அளவிற்கு இது கவனிக்கப்படவில்லை. சிற்சில சமயங்களில் கோழிகளுக்குத் தொத்து வியாதிகளினால் ஏற்படுகிற கஷ்டத்தினால் மனத்தளர்ச்சி அடைந்து அபிவிருத்தி செய்ய நோக்கமில்லை என்று கருதுகிறேன்.

பொது மக்கள் கோழி வளர்ப்பதில் சுகாதார முறைகளில், அதிக சிரத்தை எடுத்துக்கொண்டால் இந்த தொழிலை உதவித் தொழிலாகவே கிராமங்களில் செய்யலாமென்கிற நம்பிக்கை உண்டுபண்ண அடியில் முக்கியமான அனுபவங்களை மட்டும் தெளிவாக்க விரும்புகிறேன்.

இவ்விடத்தில் சண்டைபோடுகிற விளையாட்டுக்காக சாவல்கள் வளர்க்கப்படுகின்றன, கோழிகள் பெரும்பாலும் உணவுப்பொருளாகவே உபயோகிப்பதால் அதற்காகவும் வளர்க்கப்படுகின்றன. நல்ல இடம், சுகாதார வசதி, காலா காலத்தில் தீவனம் கொடுத்தல், பாதுகாப்பு இவைகளை நமது குடிகள் சிரத்தையுடன் கவனித்தால் தொத்து வியாதிகளினால் ஜாஸ்தி சேதமில்லாமல் தடுக்கக்கூடுமென்பது பண்ணையின் அனுபவம். இந்தத் தொழிலை சிறுவர்களும், பெண்பாலர்களும் கையாளக்கூடியதாகும். ஒன்றுக்கும் உதவாத நிலங்களை நிலமில்லாதவர்கள் வாங்கி, கோழி வளர்ப்புக்கு உபயோகமுள்ளதாகப் பொருத்திக்கொள்ளலாம். நாட்டு ஜாதிக் கோழிகளை அபிவிருத்தி செய்யவேணுமென்றால், நல்ல ஜாதி சாவல்களை அடிக்கடி வாங்கி உபயோகித்து நாட்டு வம்சத்தை சீர்திருத்தலாம். அதைக் காட்டிலும் உயர்ந்த ஜாதிக்கோழி முட்டைகளைப் பெற்று, நல்ல அடை கோழியைக்கொண்டு அடைவைத்து, குஞ்சுகளை எடுப்பது சுலபமான முறை. 21 நாளில் குஞ்சுகள் வெளிவரும். ஆரம்பத்தில் குஞ்சுகளை ஜாக்கிரதையுடன் ஜீர்ணமாகக்கூடிய ஆகாரங்களைக் கொடுத்துப் பாதுகாக்க வேண்டும். ஆடுமாடுகள் வளர்ப்பதற்கு அவசியமான பொருள் இதற்குத் தேவையில்லை. சுமார் ரூ 10 கொண்டே இதைத் தொடங்கி விரிவு பண்ணிக்கொள்ளலாம். ஒவ்வொருவரும் இதை உதவித் தொழிலாக அனுஷ்டிக்கவேணுமென்கிற நோக்கத்துடன் ா-தர்பாரவர்கள் ஏற்கனவே டவுனிலும், காம்பக்குடி, ஆலங்குடி, கீரனூர் முதலிய இடங்களில் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தி, உயர்ந்த ஜாதி முட்டைகளை விரும்புகிறவர்களுக்குக் கொடுத்துவருகிறார்கள். ஆனால் குடிகள் கோழி வளர்ப்பதில் சுகாதார முறை காலா காலத்தில் ஆகாரம் கொடுப்பது இவைகளில் சிரத்தை காட்டுவதாகத் தெரியவில்லை. காட்பாடி, மார்த்தாண்டம்போன்ற இடங்களில், இந்தத் தொழிலை ஜனங்கள் விரிவாகக் கையாளுவதால் நல்ல லாபம் அடைகிறார்கள். அவ்விடங்களில் கோழி ஒன்றுக்கு ரூ 15-க்கும் முட்டை ஒன்றுக்கு ரூபாய் ஒன்றும் கொடுத்து விலைக்கு வாங்குகிறார்கள். இவ்விடத்திலும் பொது மக்கள் நல்ல லாபம்பெற இதை ஸர்க்காரில் மாட்டுகிலே பூந்தோப்பிலும் நிரூபித்துக்காட்ட ஏற்பாடு செய்துவருகிறார்கள்.

ஆரோக்கியமானவும், தகுந்த வாலிபமுள்ள அடை கோழியைப் பொறுக்கி எடுத்து, முட்டையிடுதற்குப் பெயர்போன வெள்ளை லெக்ஹாரன் ரோட் ஐலண்டு சிவப்பு என்ற ஜாதிகளில் முட்டைகள் வாங்கி, குஞ்சுகளைப் பலுகச் செய்வது லாபகரமாய் இருக்கும். போஷணை சரியான முறையில் செய்தால், 8 மாதத்தில் பெட்டைக் கோழிகள் முட்டை இடும். முட்டைகள் 1½ அவுன்ஸ் முதல் 2 அவுன்ஸ் எடை இருக்கும். இவ்விடத்தில் அபிவிருத்தியை உத்தேசித்து மலிவாக முட்டை ஒன்று ரூ 0—4—0 வீதம்

விற்கப்படுகிறது. தற்போது முட்டைகளுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. இராக்காலத்தில் கோழிகள் தங்க கூடுகள் அமைக்கவேண்டும். விடுகளில் ஈர நைப்பில்லாமலும், காற்றோட்டமாகவும், பாதுகாப்பான இடமாகவும் பார்த்து இராக்காலத்தில் தங்க ஏற்பாடு செய்யவேண்டும். தினசரி காலை அந்த இடத்தை சுத்தம்செய்து, கோழியெச்சலை எடுத்து தூரத்தில் கொண்டுபோய் சேகரிக்கப்படவேண்டும். அதன் பின் காலையில் 7-மணிக்கு வெளியில் விட்டு, பல தானியங்கள் (நெல், கம்பு, கேப்பை) கலந்த ஆகாரமும், 12-மணிக்கு சுத்தமான மண்பாண்டத்தில் வெங்காயத் துண்டுகள், கீரைத்தூள், கடலைப் புண்ணாக்குத் தூள், கருவாட்டுத் தூள், தயிர், தவுடு முதலியதை ஜலத்தைவிட்டு பிசரி ஆகாரமாகவும், திரும்பவும் சாயங்திரம் 4 மணிக்குத் தானிய ஆகாரமும் கொடுப்பதில் மேன்மை தெரிகிறது. இத்துடன் கொஞ்சம் கரித்தூள், கிளிஞ்சல் தூள் சுத்தமான பாத்திரத்தில் கோழிக்கூண்டிலிருக்கவேண்டும். குடி தண்ணீருக்கு ஒரு கண்ணாடி சீசா தேவை. ஒரு தகரக் குவளையில் சீசாவில் தண்ணீர் நிறப்பி, குப்புற குவளையில் வைத்தால் குடி தண்ணீர் கெடாமல் இருக்கும். ஒரு நாளைக்கு 2 தடவையாவது இதை எடுத்து சுத்தமான ஜலம் மாற்றவேண்டும். கீரிப்பிள்ளை, பாம்பு முதலியவைகளின் தொந்தரவு இல்லாமல் கவனிக்க வேண்டும். முட்டை விற்பனையில் மாதம் 1-க்கு கோழி ஒன்றுக்கு குறைந்தது ரூ 1—14—0 வருமானம் எதிர்பார்க்கலாம். அனுமத்து செலவு போக மீதி ரூ 1—4—0 லாபம் இருக்கிறது. வருஷத்துக்கு சராசரி செலவுபோக ரூ 15 வருமானம் பெறலாம். தினசரி காலையிலும், சாயங்திரத்திலும் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும். 10 கோழிகள் வளர்ப்பது ஒருவருக்கு சிரமம் இராது. அது உதவித்தொழிலாகவே பயன் தரும்.

இன்னும் கோழி எச்சலை சேகரிக்கப்பட்டதை மழை காலத்தில் பழ விருக்ஷங்களுக்கு எருவாக்கி, அவைகளின் மாசூலை அதிகப்படுத்தி உபரி வரும்படி அடைய வழியுண்டு. கோழிகள் வளர்ப்பதினால், சிறிய பயிர்களில் நேரிடுகிற புழு, பூச்சிகளின் தொந்தரவை நீக்கலாம். பயிர்களுக்கு அவைகளினால் ஜாஸ்தி சேதம் வாராமல் தடுத்துக்கொள்ள உதவுகின்றன. ஆனால் நாத்தங்கால், கீரைப் பயிர் பக்கம் கோழிகளை மேயவிடக்கூடாது.

ஸர்க்கார் பண்ணையில் உயர்ந்த ஜாதிக் கோழிகள் வாங்கப்பட்டு, இந்த இடத்திற்குப் பொருத்தமானதென்று நிரூபிக்கப்பட்டுவருகிறது. அங்கு வளர்க்கப்படுகிற ஜாதிக் கோழிகளை எல்லோரும் வளர்க்கலாம். கோழி வளர்ப்பதில் சௌகரியங்கள் இருப்பதால் இன்னும் எல்லோரும் இதில் ஊக்கம் எடுத்து இக்குள்ள பொது மக்களுக்கு போதுமான அளவு முட்டை கோழிகள் கிடைக்கும்படிச்செய்ய முன்வரவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கெஜெட்டுச் செய்திகள்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்பட்ட பரிக்ஷைகள் சம்பந்தமாய் வருஷாந்திர பரிக்ஷைகளானது 1947-ம்வரு டிசம்பர்மீ 15உயிலும் அதற்கு அடுத்து வருகிற தினங்களிலும் நடக்குமென்றும் அதைப்பற்றிய பூராவிவரங்களும் 16—10—47 சமஸ்தான கெஜெட்டு 1-வது பாகத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

* * * *

யூனியன்களில் போக்குவரவு சாதனங்களான வண்டிகள் மோட்டார்கள் இவைகள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் செலுத்தவேண்டிய வரி விகிதம் 16—10—47 சமஸ்தான கெஜெட் முதலாவது பாகத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

* * * *

புதுக்கோட்டை டவுன் தவிர பாக்கி எல்லாக் கிராமங்களிலும் ஏற்படும் பிரசவகேஸ்களிலாவது அல்லது இறந்த கேஸ்களிலாவது வீடுகளில் விளக்குப்போடுவதற்கு சம்பந்தப்பட்டவர்களின் மனுக்களின் பேரில் மூன்று யூனிட்டுக்கு அதிகப்படாமல் உள்ள கிரோஸின் எண்ணெயை சமீபத்திலுள்ள ரேஷன் கடைகளில் வாங்கிக்கொள்ளும்படி உத்தரவளிக்க ஸ்ரீ-தர்பார் அவர்கள் எல்லா வட்டம் மணியகாரர்களுக்கும் அதிகாரம், கொடுத்திருக்கிறார்கள்.

* * * *

ஸமஸ்தானத்திலுள்ள மில்துணி பங்கீட்டின் நிலைமையை பொதுமக்களுக்கு எடுத்துக்கூறி லைஸென்ஸ்தார்கள் எவ்விதம் விற்கவேண்டுமென்பதைப் பற்றிய பூராவிவரத்தையும் புதுக்கோட்டை கெஜெட் 22—10—47உயுள்ள முதலாவது பாகத்தின் விசேஷ அனுபந்தத்தின்மூலம் இரண்டாவது மந்திரி அவர்கள் ஓர்கம்யூனிகே விடுத்திருக்கிறார்கள்.

* * * *

புதுக்கோட்டை முனிசிபாலிடியின் பொது தொகுதி II, V, VI, X-வது வார்டுகளின் தேர்தலுக்கு அபேக்ஷர்களாக நிற்கிறவர்கள் 9–11–47 மாலை 3-மணி முதல் 5-மணிக்குள் முனிசிபல் சேர்மன் அவர்களிடம் முனிசிபல் ஆபீஸில் நியமனச் சீட்டுகளை டிபாஸிட் தொகைகட்டிய பின்னர் கொடுக்கப்படவேண்டுமென்றும், அவ்விதம் கொடுக்கப்படும் நியமனச் சீட்டுகளின் பரிசிலனை 12—11—47உ அன்று பகல் 2-மணிக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், தேர்ந்தெடுக்கப்படவேண்டிய சங்கியைக்கு அதிக

மாக அபேக்ஷகர்களிருந்தால் 24—11—47உ தேர்தல் முனிசிபல் ஆபீஸில் நடைபெறுமென்றும் இவை சம்பந்தமான ஓர் விளம்பரம் டவுன் முனிசி பாலிடியால் சமஸ்தான கெஜெட் 6-வது பாகத்தின் ஸ்பெஷல் அனுபந்த மாக 29—10—47உ அன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

*   *   *   *

2—11—47 விசேஷ அனுபந்தத்தின்மூலம் அடியில்கண்ட பிரஸ் கம்யூனிகே ஈ-தர்பார் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது.

*   *   *   *

1—11—47 விசேஷ அனுபந்தத்தின்மூலம் சமஸ்தானத்திற்கு வெளியே பர்மிட் இல்லாமல் கருணைக்கிழங்கு ஏற்றுமதி செய்யலாம் என்று கவர்ன்மெண்டார் ஸர்க்கார்ந்து அறிவித்துள்ளார்கள்.

*   *   *   *

“ஏற்கனவே கையிருப்பிலிருந்த சுமார் 460 பேல் மில் துணியை பங்கீடு சீட்டுதார்களுக்கு வினியோகிக்க மில்துணி லைசென்ஸ்தார்களுக்கு சப்ளை செய்யப்பட்டு வருவதில், இப்பால் இன்னும் 233 பேல் மில்துணி ஈ-தர்பார் அவர்களுக்கு வந்திருப்பதால் மில்துணி வினியோகம் சம்பந்தமாக 21—10—47உயிட்ட ஈ-தர்பார் அவர்களின் R. C. R-3-2132 of 47 உத்திரவிற்கு சற்று மாறுதலாக அடியிற்கண்டபடி வினியோகிக்கப்பட வேண்டுமென்று உத்திரவு செய்திருக்கிறார்கள்.

1. ஒவ்வொரு துணிகார்டிலும் ஏற்பட்ட அளவு பூராவையும் தீபாவளி ஸ்பெஷல் ஒன்பது கெஜத்தையும் பங்கீடு சீட்டுதார்கள் அவரவர்களுக்கு ஏற்பட்ட கடைகளில் வாங்கிக் கொள்ளலாம்.

2. ஒவ்வொரு கார்டிலும் மேற்கண்டபடி கொடுத்ததுபோக பாக்கியுள்ள யூனிட்டுகளுக்கும் தீபாவளி ஸ்பெஷல் ஒன்பது கெஜத்தையும் தீபாவளிக்குப் பிறகு 30—4—48-உக்குள் வாங்கிக் கொள்ளலாம்.

3. தீபாவளிக்குப் பிறகு தீபாவளி ஸ்பெஷல் ஒன்பது கெஜத்தையோ அல்லது அதில் பாக்கியுள்ளதையோ எந்த கார்டுக்கும் இருப்புள்ள எந்தக் கடையிலும் வாங்கிக்கொள்ளலாம்.”

சாரணக் குறிப்புகள்.

திருமயம வட்டார சாரண ராலி.

(சாரணன் வே. ஸ்ரீநிவாஸன்.)

நம் சமஸ்தானம் கடந்த பத்து வருஷங்களிலே கண்டிராத மாபெரும் சாரணர் கூட்டம் (Rally) ஒன்று திருமயம் தாலுகா, ராமச்சந்திரபுரத்தில்

அக்டோபர் 16, 17, 18 தேதிகளில் நடைபெற்றது. சமஸ்தான சாரண இயக்கக் காரியதரிசி ஸ்ரீ G. வேங்கடேசன் D. C. C. இந்த சாரண ராலியைத் தலைமை வகித்து நடத்திக் கொடுத்தார். திருமயம் வட்டாரத் திரிசாரணத் தலைவர் ஸ்ரீ K. M. N. குமரப்ப செட்டியார் உதவித் தலைவராக இருந்து பொறுப்புடன் ராலியை சீரிய முறையில் ஏற்பாடு செய்தார். 16-ம் தேதி காலை நேரத்திற்குள் ராமச்சந்திரபுரம் குமிழாங்குண்டு ஊரணியின் நான்கு கரைகளிலும் ஆங்காங்கு கூடாரங்களும் கீற்றுக் குடிசைகளுமாக பதினைந்து விடுதிகள் தோன்றி அந்த இடத்திற்கே ஒரு தனிச் சோபையைத் தந்தன. மின்சார வசதியால் விடுதிகளிலும் ஊரணிக் கரைகளிலும் பிரகாசமான விளக்குகள் போடப்பட்டன. ராலி ஆபீஸுடன் முகாமில் மற்ற விடுதிகளிலிருக்கும் சாரணத் தொகுதிகள் தொடர்பு வைத்துக்கொள்ள Tell master என்ற பேச்சு வசதியும் மின்சாரத்தின் உதவியால் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. ராலி முகாமை விட்டு எந்தப் பொருளுக்காகவும் சாரணர்கள் வெளிச் செல்லாது இருக்கும் வகையில் ராலி இடத்திற்குள்ளேயே ஒரு கடை (canteen) நடத்தப்பட்டது.

16-ம் தேதி மாலை நேரத்திற்குள் ராலி ஸ்தலம் ஜனத்திரளால் சூழப்பட்டுவிட்டது. மாலை 4 மணிக்குள் வெளியூரிலிருந்து எல்லாச் சாரணத் தொகுதிகளும் வந்து சேர்ந்தன. பதினொரு தொகுதிகளிலிருந்து சுமார் முன்னூறு சாரணர்கள் கலந்து கொண்டார்கள். மாலை ஆகாரம் செய்தபிறகு கொடி மரங்களைச் சுற்றி சாரணர்கள் ஒரு அரை வட்ட அமைப்பில் நின்று கொண்டு டெபுடி பிரதம சாரணர் ஸ்ரீ ராஜகுமார் ராதாகிருஷ்ணத் தொண்டைமான் துரைராஜா அவர்களின் வரவை எதிர் நோக்கித் தயாராக இருந்தனர். மாலை ஐந்தரை மணிக்கு டெபுடி பிரதம சாரணர் வந்து சேர்ந்தார். ராலித் தலைவர் அவரை வரவேற்றார். தேசீயக் கொடியையும் சமஸ்தானக் கொடியையும் டெபுடி பிரதம சாரணர் ஏற்றிவைத்தார். கொடி வணக்கமும் கடவுள் வாழ்த்தும் நடந்தபின் ராலியைத் துவக்கி வைக்கும் போது டெபுடி பிரதம சாரணர் பின்வருமாறு சில வார்த்தைகள் பேசினார். "சாரண சகோதரர்களே! சில வருஷங்களுக்கு முன் இதுபோன்ற ஒரு ராலி நடந்திருப்பதாக நான் கேட்டிருக்கிறேன். ஆனால் பார்த்தது இல்லை. இன்று உங்களிடையே வந்திருந்து இதை ஆரம்பித்து வைக்க நேர்ந்தது என் பாக்யமாகும். இந்த ராலியை நான் திறந்துவைக்கும் முகூர்த்தத்தில் உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும் இங்குள்ள சாரணர்கள் மாட்சிமை மிக்க மன்னருக்கும் சமஸ்தானத்தின் மக்களுக்கும் தங்கள் கடமையைச் செய்யவேண்டும் என்று கூற விரும்புகிறேன். அதுவே சாரணர்களுடைய நோக்கமும் கொள்கையுமாகும். மற்றொரு விஷயம் சாரணர்களுக்கு நான் சொல்லவேண்டுவது இருக்கிறது. ஒவ்வொரு சாரணத் தலைவரும் தங்கள்

சாரணர்களைக் கூட்டிக் கொண்டு கிராமங்களுக்குச் சென்று பொது ஜனங்களுக்கும் விவசாயிகளுக்கும் தங்களால் இயன்ற வரையில் உதவிபுரிய வேண்டும். கிராமங்களின் நிலைமையைச் சீர்திருத்தி கிராமவாசிகளை நல்ல வழியில் புகுத்தி முன்னேறச் செய்வதுதான் சாரணர்களின் முக்யக் கடமையாகும். அப்படியே நானும் சாரணர்களோடு சேர்ந்து எல்லோருக்கும் உதவி செய்வேனென்று உறுதிமொழி கூறுகிறேன். இப்போது நான் வெகு மகிழ்ச்சியுடன் இந்த ராலியை ஆரம்பித்து வைக்கிறேன்."

மறுதினம் 17-ம் தேதி சில சாரணப் பயிற்சி போட்டிகள் நடைபெற்றன. இவைகளை டெபுடி பிரதம சாரணர் பார்வையிட்டார். 17-ம் தேதி மாலை சாரணர்களின் கைத்திறமையை எடுத்துக் காட்டிப் பயன் கொடுக்கக்கூடிய சாரணர்கள் கைத்திறன் பொருட்காட்சியை (Scout Craft Exhibition) சமஸ்தான சாரண கமிஷனர் கான்பஹதூர் P. கலிபுல்லா சாகிப் அவர்கள் திறந்து வைத்தார். அந்த சமயத்தில், முன்னேறும் இந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தொழில் வளர்ச்சியும் வியாபார வளர்ச்சியும் தேவை என்று மக்களுக்கு அறிவுறுத்த, அவர் மறக்கவில்லை. அன்று இரவு பொது ஜனங்கள் கண்டு களிக்க பெரியதொரு தீவட்டக் களியாட்டம் நடந்தது. அதற்கும் டெபுடி பிரதம சாரணரே தலைமை வகித்தார்.

ராலியினுடைய முக்ய தினமாகிய 18-ம் தேதியன்று சாரணர்களும் மக்களும் மிகவும் குதூகலமாக இருந்தனர். அன்றும் சில போட்டிகள் நடந்தன. மாலை நடக்க வேண்டிய ராலிக்கு ஒத்திகைகள் நடைபெற்றன. மாலை 4 மணியிலிருந்து பார்வையாளர்கள் வர ஆரம்பித்தனர். ராலி ஸ்தலத்தில் மிகப் பெரியதொரு அரை வட்டத்தில் சாரணர்கள் பிரதம சாரணர் மாட்சிமிக்க மன்னரை எதிர்நோக்கி நின்றிருந்தனர். இரண்டு கொடிமரங்களுக்கு கீழே ஒரு பெரிய மேடையிட்டு ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. ராலியிலேயே முழுவதும் தங்கியிருந்த டெபுடி பிரதம சாரணர் ராலி ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தார். மந்திரிகளும், சமஸ்தான சாரண கமிஷனரும் மன்னர் வருமுன்னர் வந்தனர். குறிப்பிட்டபடி 5.40-மணிக்கு சமஸ்தான பிரதம சாரணர் விஜயம் செய்ய ராலித் தலைவர் ஸ்ரீ G. வேங்கடேசன் மன்னரை வரவேற்றார். இளஞ்சாரணர்களின் (cubs) Grand Howl பிரதம சாரணரை வாழ்த்தி வரவேற்றது. தொகுதிகளைப் பார்வையிட்டுவிட்டு பிரதம சாரணர், உதவிப் பிரதம சாரணரோடும் கமிஷனரோடும் மேடையில் சென்றமர்ந்தார். திருமயம் வட்டாரத் திரிசாரணத் தலைவர் ஸ்ரீ K. M. N. குமரப்ப செட்டியார் சாரணத் தொகுதிகளுக்குத் தலைமை வகித்து மன்னர் முன் நடத்திச் சென்றார். அணி அணியாகச் சாரணர்கள் பிரதம சாரணர் முன் நடந்து சென்று வணக்கம் செலுத்திய காட்சி மிகவும் ரம்யமாக இருந்தது. இந்த March

past, Saluting base-ல் நின்றுகொண்டு வணக்கத்தைப் பெற்றுக்கொண்டார். இது முடிந்ததும் சாரணர்களை மேடைக்கு அருகில் நெருங்கி வரச்செய்து அவர்களுக்கும் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பொது மக்களுக்கும் பிரதம சாரணர் சில பொன்மொழிகளை பின்கண்டபடி கூறினர்.

"அன்புமிக்க பெரியோர்களே! என் சாரணச் சகோதரர்களே! இவ்வளவு சிரிய முறையிலே நடைபெறும் இந்த ராலிக்கு என்னை அழைத்ததுபற்றி மிகவும் சந்தோஷம் அடைகிறேன். உங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தையும் தெரிவித்துகொள்கிறேன். நாம் இங்கு சந்தோஷமாகக் கூடியிருக்கிறோம். ஒரு பயனுமில்லாமல் நாம் கலைந்துவிடக்கூடாது. நமக்கு மிகவும் கஷ்டமான வேலைகள் இனித்தான் இருக்கின்றன. கஷ்டமென்ற உடனே யாரும் பயப்படவேண்டாம். கலகம் ஒன்றும் வரப்போவதில்லை!

நமது நிர்வாகம் புதிய மாறுதல்கள் அடையப்போகிறது. அதில் உங்கள் யாவருக்கும் அதிக வேலை இருக்கிறது. பொது மக்களின் உதவி சர்க்காருக்கு அவசியம். அதிலும் சாரணர்கள்தான் மிகப்பெரிய பங்கை சாதிக்கவேண்டும். இனி வரப்போகும் நிர்வாகத்தில் அவர்களுக்கு அதிகப் பங்கு இருக்கிறது. கிராமங்களுக்குச் சென்று நல்ல தகுதி உடையவர்களைத் தேர்ந்தெடுக்க மக்களுக்கு உதவவேண்டும். மக்களுக்குக் கல்வி இன்றியமையாதது. இந்தத் துறையிலும் அபிவிருத்தி ஏற்பட சாரணர்கள் உதவி செய்யவேண்டும். சாதிமத வேற்றுமை இன்றி சகோதரர்கள் போல யாரும் கலந்து பழகும் சகோதரத்வம் இந்த சாரண இயக்கம். ஆகவே நீங்கள் எளிதில் மக்களிடை சாதிமத பேதங்களைப் போக்கி ஒற்றுமையாக வாழ உதவிசெய்ய முடியும். உங்களுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. புதுக்கோட்டை சாரணர்கள் அதிக ஆர்வமுள்ள உழைப்பாளிகள் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நம் சாரண சகோதரர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக!"

"இந்தப் பொன்போன்ற புத்திமதிகளை சாரணர்கள், என்றும் நினைவில்கொண்டு ராஜவிசுவாசத்தோடு சேவை செய்வார்கள்" என்று ஸ்ரீ G. வேங்கடேசன் தம் வந்தன வார்த்தைகளின்போது உறுதி கூறினர்.

இரவு குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகள் கொண்ட ஒரு சிறந்த தீவட்டக் களியாட்டம் பிரதம சாரணர் முன்னிலையில் நடைபெற்றது. சிறந்த மூன்று நிகழ்ச்சிகளுக்கு மன்னர் பரிசு வழங்குவதாகக் களிகூர்ந்து தெரிவித்தார். மன்னருக்கு சாரணர்கள் ஜயகோஷமிட்டு வழியனுப்பினர்கள்.

19-ம் தேதி பிற்பகலோடு ராலி இனிது முடிந்தது. மூன்று நாட்களும் ராலியில் டெபுடி பிரதம சாரணர் கலந்துகொண்டு முகாமிலேயே இருந்தது ராலிக்கு ஒரு தனி சிறப்புத் தந்தது.

பர்மாச் செய்திகள்.

பர்மாவின் விஸ்தீர்ணம் சுமார் 262,000 சதுரமைல்கள். கடற்கரையின் ஓரத்தின் நீளம் 2,000 மைல்கள். தென்மடல் அதிகப்படியான நீளம் சுமார் 1,300 மைலும், கிழமேல் அதிகப்படியான நீளம் சுமார் 600 மைலும் ஆகும்.

1931-ஆம் வருஷத்திய கணக்குப்படி மொத்தம் ஜனத்தொகை 14,647,756. அதில் 1,017,825 இந்தியர்கள். ஜப்பானியப் போராட்டத்தால் 1941-ஆம் வருஷ ஜனத்தொகை விவரம் கிடைக்கவில்லை.

பர்மாவில் மூன்றிலிரண்டுபங்கு ஜனங்கள் விவசாயத்தினால் பிழைக்கிறார்கள். மொத்தம் பயிரிடப்பட்ட நிலங்களின் விஸ்தீர்ணம் 17,343,000 ஏக்கர்கள். அதில் ஐராவதி டெல்டா பிரதேசங்களிலும் சமுத்திரக்கரை தீரத்திலுள்ளதுமான நிலங்கள் கீழ்பர்மாவைச் சேர்ந்தது மொத்தம் 11,000,000 ஏக்கர்கள். மத்தியபர்மாவில் 5,500,000 ஏக்கர் நிலங்களில் பயிரடப்படுகின்றன. காடுகளின் விஸ்தீர்ணம் 145,000 சதுரமைல்கள். எண்ணெய்க் கிணறுகளுள்ள இடங்கள் அநேகமாக ஐராவதி நதிக்கரையை அடுத்தே இருக்கின்றது.

விவசாய சம்பந்தமான கடன்கள் சுமார் 50,000,000 பவுன்களிருக்கலாமென்று மதிப்பிடப்படுகிறது. கீழ்பர்மாவிலுள்ள பயிரிடும் நிலங்களில் ஏறக்குறைய பாதியளவு விவாசாயிகளிடமிருந்து பெரும்பாலும், தென் இந்தியாவிலிருந்து அங்கு சென்றிருக்கும் லேவாதேவிக்காரர்களான விவசாயிகள் அல்லாதாரிடம் சென்றிருக்கிறது.

பர்மா பிரதி வருஷமும் சுமார் 7,500,000 டன்கள் அரிசியை உற்பத்தியாக்குகிறது. உலகத்திலேயே அதுதான் அதிகப்படியான அரிசி ஏற்றுமதி செய்கிறது. பிரதி வருஷமும் அது சுமார் 3,000,000 டன்கள் அரிசியை ஏற்றுமதி செய்கிறது.

தேக்கு மரங்களின் உற்பத்தி ஒரு ஆண்டுக்கு 446,000 டன்களாகும். அதில் 214,000 டன்கள் ஏற்றுமதியாக்கப்படுகிறது.

ஜப்பானிய ஆக்கிரமிப்புக்குமுன் 4,400 எண்ணெய்க்கிணறுகளிலிருந்து வருஷம் ஒன்றுக்கு 300,000,000 காலன் க்ரூடாயில் கிடைத்தது. இது பர்மாவின் தேவையை பூர்த்தி செய்ததுமன்றி இந்தியாவிற்கு 60,000,000 காலன் பெட்ரோலையும், 140,000 காலன் மண்ணெண்ணெயையும் கொடுத்தது.

பர்மா வழக்கமாக வருஷம் ஒன்றுக்கு 3,000,000 பவுன் மதிப்புள்ள உலோகங்களை பெட்ரோலியத்தைத் தவிர கொடுத்து வருகிறது. இதில் 6,000,000 அவுன்ஸ் வெள்ளியும் 77,000,000 டன்கள் ஈயமும், 60,000 டன்கள் வெள்ளீயமும் சேர்ந்தவை.

1939-40-ம் வருஷத்திய கணக்குப்படி மொத்தச் சரக்குகளின் ஏற்றுமதியின் மதிப்பு 5,476 லக்ஷம் ரூபாய்களாகும். அதில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது 60 சதவிகிதமாகும். பர்மாவின் ஏற்றுமதிகளில் சரிபாதி விவசாயப் பொருள்களாகும். அதே வருஷத்திய இறக்குமதியின் பொருமானம் 2,532 லக்ஷம் ரூபாய்கள். அதில் இந்தியாவிலிருந்து வரப்பெற்றது 55 சதவிகிதமாகும்.

இவ்விதம் செழிப்படைந்த பர்மாவானது இரண்டாவது உலகமஹா யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பர்மாவானது இருமுறை யுத்த தளமாக இருந்ததின் விளைவால் பெரிதும் நாசமடைந்தது. புனருத்தாரணவேலை முக்கியமாயிற்று, இதைக்கருத்தில் கொண்டே 1945-ம் வருஷத்தில் 33 சட்டங்களும், 1946-ல் 50 சட்டங்களும், நடப்பு வருஷத்தில் 2—9—47-வரை 53 சட்டங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

கொப்பனாபட்டிக் கலைமகள் கல்லூரி

வேள்பாரி நூல்நிலையக் கால்கோள் விழா.

கொப்பனாபட்டிக் கலைமகள் கல்லூரி வேள்பாரி நூல் நிலையக் கால்கோள் விழா, 3—11—47 திங்கட்கிழமை பகல் 12·15-மணி அளவில், கல்லூரி மாணவிகள் தேவாரம் முதலிய இன்னிசைக் கீதங்கள் பாடவும் உள்ளூர் வெளியூர்ப் பெரியார்கள் பலர்சூழவும் சென்னைத் தமிழ்ப்பெரியார் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்களால் சிறப்புற நடாத்தப்பெற்றது. கல்லூரித்தலைவர் திரு. அ. மெய்யப்ப செட்டியாரவர்கள், திரு. வி. க. முதலியாரவர்களையும் அவருடன் போந்திருந்த திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களையும் வரவேற்றுப் பேசியபின்னர் திரு. வி. க. முதலியார் அவர்கள் கல்லூரியின் தனிச் சிறப்புகளையும் மாணாக்கியர் பிற்கால வாழ்க்கையில் மேற்கொள்ளவேண்டிய சீரியவற்றையும்பற்றி இனிது எடுத்து இயம்பினர். திரு. வி. க. அவர்களுடன் போந்திருந்த திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களும் கல்லூரியின் அமைப்பு, கல்விமுறை, மாணாக்கியர் புலமைத்திறன் முதலியவற்றினால் நனி மகிழ்ந்து கல்லூரியினையும் மாணாக்கியரையும் வாழ்த்தி நல்லுரை பல நவின்றனர். பின்னர் கல்லூரித் தலைவரவர்கள் வந்தனோபசாரம் கூற மாலை நாலரைமணி அளவில் கூட்டம் இனிது நிறைவேறியது.

பத்திரிகை விமர்சனங்கள்

“பிரஜாமித்திரன்” பத்திராதிபர்—கு. இராமசாமி, புதுக்கோட்டை. பிரதியின் விலை அணா 4. ஓர் தமிழ் மாத வெளியீடு. சமஸ்தான தலைநகரிலிருந்து பிரசுரிக்கப்படுவது. இதன் முதல்இதழ் 15—10—47-ல் வெளிவந்திருக்கிறது. குறைந்தகால அளவில் வெளியிடப்பட்டிருப்பதால் இவ்விதழ் குறைந்த பக்கங்களோடு வெளிவந்திருப்பதாக இதன் பத்திராதிபர் தெரிவித்துள்ளார். இப்பத்திரிகையில் கதைகள், கட்டுரைகள், அரசியல் சம்பந்தமான விஷயங்கள், வைத்தியக் குறிப்புகள், செய்திக் குறிப்புகள் முதலிய விஷயங்களை யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும் விதமாய் எழுதப்பட்டு நன்றாக பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்பத்திரிகைக்கு நமது நல்லாசிகள் உரித்தாகும்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 850—15-11-47.